*42*

# காணுங்கள், கவனியுங்கள், மற்றும் கற்றுக்கொள்ளுங்கள்

## [13:1–10]

*இரண்டு ஜீவன்களை அறிமுகப்படுத்துதல் என்பதே 13ம் அதிகாரத்தின் முதன்மை நோக்கமாக உள்ளது: கடல் மிருகம் மற்றும் பூமி மிருகம். இவ்விரண்டும், 12:9ல் சாத்தான் என்று தெளிவாக அடையாளப் படுத்தப்பட்ட, வலுசர்ப்பத்தின் கூட்டாளிகளாய் இருந்தன. பதினெட்டில் பதினைந்து வசனங்கள் இந்த ஜீவன்களின் பேரழிவுக்கு உட்படுத்தும் வல்லமை மற்றும் மரணத்திற்கேதுவான நோக்கம் ஆகியவற்றின்மீது கவனத்தைக் குவிக்கின்றன, இந்தப் பகுதியானது பயமுறுத்துவதாகவும் - மூழ்கடிக்கச் செய்வதாகவும்கூட உள்ளது. தொடக்ககாலக் கிறிஸ்தவர் களுக்கு (மற்றும் நமக்கு) உதவுவதற்காகத் தேவன், தமது மக்களுக்கு உட்கண்ணோட்டத்தைத் தரவும் அவர்கள் தங்கள் கருத்துநோக்கைக் காத்துக்கொள்ள உதவவும், ஒவ்வொரு மிருகத்தைப் பற்றிய எடுத்துரைப்புக்கும் பின்னால் ஒரு குறிப்பை இடைச்செருகினார் (13:9, 10, 18).*

*முதல் மிருகத்தைப் பற்றிய அறிமுகத்திற்குப் பின்பு, நாம், "காதுள்ளவனெவனோ அவன் கேட்கக்கடவன்" என்று வாசிக்கின்றோம் (வசனம் 9). ஏழு சபைகளுக்கு எழுதிய கடிதங்கள் ஒவ்வொன்றின் முடிவிலும் இயேசு அறிவுரையைக் கொடுத்திருந்த 2 மற்றும் 3ம் அதிகாரங்களுக்குப் பின்பு, நாம் இந்தப் புத்திமதியை இதுவரையில் கேட்டிருக்கவில்லை. இது கவனநிறைவுடன் கேட்டு பகுத்தறிந்து, புரிந்து கொள்ளுதலுக்கான ஒரு வேண்டுகோளாக உள்ளது.*

உலகப்பிரகாரமான கல்வியில் "மூன்று R" கள் முக்கியமானவைகளாய் இருப்பது போன்றே,[1] வெளிப்படுத்தின விசேஷத்தைப் படிப்பதில் "மூன்று L"கள் முக்கியமானவைகளாய் இருக்கின்றன: "look," "listen," and "learn" (இது தமிழில் மூன்று "க" என்று கூறப்படலாம்: அதாவது, "காணுங்கள்," "கவனியுங்கள்" மற்றும் "கற்றுக்கொள்ளுங்கள்"). அடையாளத்தைக் காணுங்கள், மறைவான செய்திகளை கவனியுங்கள், தேவனுடைய பாடத்தைக் கற்றுக்கொள்ளுங்கள். 13ம் அதிகாரத்தின் முதல் வசனங்களை

*நாம் ஆய்வுசெய்கையில், நீங்கள் கற்றுக்கொள்ளும்படி தேவன் விரும்புபவை என்ன என்பதைக் கண்டறிவதற்கு மூன்று "க"க்களைச் சிந்தையில் வைத்துக்கொள்ளுங்கள்.*

## பாடம் ஒன்று: பிசாசானவன் மனித முகவர்களைப் பயன்படுத்துகின்றான்

*"தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய (ஸ்திரீயினுடைய) சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணுதல்" என்பதே வலுசர்ப்பத்தின் விருப்பத்திற்குரிய நோக்கமாக இருந்தது என்று 12ம் அதிகாரம் எடுத்துரைத்தது (வசனம் 17). இதைச் செய்வதற்கு வலுசர்ப்பம் எவ்வாறு திட்டம் தீட்டிற்று என்று 13ம் அதிகாரத்தில் விபரமாகக் கூறப்படுகிறது: அது தனது முகவர்களின் மூலமாக இதைச் செய்யும், அம்முகவர்கள் இதன் நோக்கத்தை திறமையாக கையாளக்கூடியவர்களாய் இருப்பார்கள்.*

*இந்தப்பாடத்தில் நாம், 1முதல் 10வரையுள்ள வசனங்களைப் படித்து: இந்த முகவர்களில், கடல் மிருகம் என்ற முதல் மிருகத்தைக் குறித்துக் கற்போம். நமது அடுத்த பாடம் 11முதல் 18வரையுள்ள வசனங்களை மையப்படுத்தியிருக்கும், அதில் நாம் பூமியிலிருந்து வந்த மிருகம் என்ற இரண்டாவது முகவரைச் சந்திப்போம்: இருப்பினும், மிருகங்களை நோக்கி நாம், நமது கவனத்தைத் திருப்புவதற்கு முன்பு சாத்தான் தனது நோக்கங்களை நிறைவேற்றுவற்கு முகவர்களைப் பயன்படுத்துகின்றான் என்று வலியுறுத்த நான் விரும்புகின்றேன். விசேஷமாக அவன், மனித முகவர்களைப் பயன்படுத்துகின்றான்.*

*நமது அடுத்த எடுத்துரைப்பில் நாம், வெளிப்படுத்தின புத்தகத்தில் மிகவும் திகைக்க வைக்கும் வசனப்பகுதி என்று விளக்கவுரையாளர்கள் கருதும் பின்வரும் வசனப்பகுதியை எதிர்கொள்ளுவோம்: 13:18, அத்துடன் இதில் உள்ள "அறுநூற்று அறுபத்தாறு" என்ற மறைமுகக் குறிப்பு. "அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது" என்பதை வாசகர்கள் கவனியாது விடுவதாகக் காணப்படுகிறது. இது ஒரு மிருகத்தின் இலக்கமா யிருப்பதில்லை; இது சிகப்பு நிற உடையும் கொம்புகளும் வாலும் கொண்ட அசுத்த ஆவியின் இலக்கம் அல்ல; இது சக்திசாலியான ஒரு மனிதனின் இலக்கமும் அல்ல; மாறாக, இது "மனுஷனுடைய இலக்கமாக உள்ளது." கிரேக்க மொழியில், ("a"அல்லது "an" என்ற) திட்டவட்டச் சுட்டுச்சொல் இல்லாதபடியால், இவ்வசனப்பகுதியை "மனிதனின் அல்லது மனித குலத்தின் இலக்கம்" என்று வாசிக்க முடியும்.* NIV *வேதாகமத்தில்* "it is man's number" *என்றும்* RSV *வேதாகமத்தில்,* "it is a human number" *என்றும் உள்ளன.*

*13ம் அதிகாரம் பற்றிய நமது படிப்பில் நாம், பிசாசானவன் மனித முகவர்களின் மூலமாக வேலை செய்வதைக் காண்போம்.*[2] *யோவானின் நாட்களில், பிசாசானவன் ரோம அதிகாரிகளின் மூலமாகக்*

*கிறிஸ்தவர்களைக் கொலைசெய்தான். இன்றைய நாட்களில், அவனும் அவனது அசுத்த ஆவிபிடித்த உதவியாளர்களும், அன்றாடம் நாம் தொடர்பு கொள்ளும் மக்கள் மூலமாக நம்மைத் தாக்குகின்றனர். இயேசு தமது சீஷர்களை அனுப்பியபோது, அவர்கள் அசுத்த ஆவிகளைக் குறித்துக் கவலைப்பட வேண்டும் என்று கூறவில்லை, ஆனால் அவர் ''மனுஷரைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்'' என்றுதான் அவர்களை முன்னெச்சரிக்கை செய்தார் (மத்தேயு 10:17).*

*"காதுள்ளவனெவனோ அவன் கேட்கக்கடவன்" (13:9).*

## பாடம் இரண்டு: பிசாசானவன் பயமுறுத்துதலைப் பயன்படுத்துகின்றான் (13:1, 2)

*காட்சியை சிந்தைக்குக் கொண்டு வாருங்கள்: "பின்பு நான் [he, மிருகம்][3]கடற்கரை மணலின்மேல் நின்றேன்" (வசனம் 1அ). சந்தர்ப்பப் பொருளில், கடல் என்பது, குழுவாக இருந்த, சலதலத்த மனித இனத்தைக் குறிப்பதாக இருக்கலாம் (வசனம் 1ஐ 17:1, 15 உடன் ஒப்பிடவும்; ஏசாயா 60:5ஐக் காணவும்). இதை நாம், "திசைகாட்டும் கருவியின் ஒவ்வொரு முனையின் திசையில் இருந்து வீசும் பலத்த காற்றுகளினால் அலைக்கழிக்கப் பட்டு, கொந்தளித்து, நுரைகளைக் காற்றில் அனுப்பித் தெளிக்கும் கடல்" என்று கண்ணோக்க வேண்டும்; நாம், "தறிகெட்ட பொருட்கூறுகளின் எரிச்சலான முழக்கம்" என்பதாக கேட்க வேண்டும்.[4]*

*யோவான் கவனித்துக் கொண்டிருக்கையில், தத்தளிக்கும் தண்ணீரில் இருந்து, பயங்கரமான ஒரு மிருகம் உதித்தெழுந்தது. முதலாவது, நுரைகளினூடே அதனுடைய தலை உதித்தது, பின்பு அதன் உடல் எழும்பிற்று:*

> *அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன், அதற்கு ஏழு தலைகளும் பத்துக்கொம்புகளும் இருந்தன, அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன. நான் கண்ட மிருகம் சிறுத்தையைப் போலிருந்தது, அதின் கால்கள் கரடியின் கால்களைபோலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவும் இருந்தன (வசனங்கள் 1ஆ, இ, 2அ). ("**கடல் மிருகம்** " என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*இது நாம், 11ம் அதிகாரத்தில் சற்றுநேரம் சந்தித்ததும், பாதாளத்தில் இருந்தேறிவந்து, இரண்டு சாட்சிகளைக் கொன்றுபோட்டதுமான வெற்றிகொள்ள இயலாத ஜீவனாக உள்ளது (வசனம் 7). 13ம் அதிகாரத்தின் மிருகம் மீண்டும் பாதாளக்குழியில் இருந்து வெளிவருவதாகச் சித்தரிக்கப்படும் (17:3, 7, 8) இந்த மிருகமானது சில வேளைகளில் பாதாளக்குழியில் இருந்து வருவதாகவும், சில வேளைகளில் கடலில் இருந்து வெளிவருவதாகவும் சித்தரிக்கப்படுதல் பற்றிக் கவலைப்படாதீர்கள்: (1) ''பாதாளக்குழி'' என்பது கிரேக்கப் பழைய ஏற்பாட்டில் கடலின் ஆழங்களை[5] (பழைய ஏற்பாட்டில் இது மிகவும் பொதுவாக "ஆழம்" என்று*

*மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) குறிக்கப் பிரதானமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. "பாதாளக் குழி" மற்றும் "கடல்" என்ற கருத்துக்களுக்கு இடையில் நெருங்கிய உறவு உள்ளது. (2) இது ஒரு அடையாளத்துவமாகத் தான் உள்ளது - அடையாளத்துவம் என்பது குறிப்பிட்ட அளவு நீராளத்தன்மை கொண்டுள்ளது.*

*வெளிப்படுத்தின புத்தகத்தின் எஞ்சிய பகுதியில், கடல் மிருகமானது "மிருகம்" என்று மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ள வேளையில், பூமியிலிருந்து வந்த மிருகம் "கள்ளத் தீர்க்கதரிசி" என்று அழைக்கப்படுகிறது (16:13; 19:20; 20:10ஐக் காணவும்). ஆகையால் நான் அந்தக் குறிப்புப் பெயர்களை அவ்வப்போது பயன்படுத்துவேன்.*


*மிருகத்தைப் பற்றிய விவரிப்பை நான் வாசிக்கையில், இறந்துபோன உடல்களின் துணுக்குகள் மற்றும் துண்டுகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட, மேரி ஷெல்லி என்பவரின் "பிராங்க்கென்ஸ்டைன் பெருவிலங்கு,"[6] என்ற பிரசித்திபெற்ற உருவம் என் நினைவுக்கு வருகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 13ன் மிருகம், தானியேல் தீர்க்கதரிசியின் தரிசனம் ஒன்றில் சித்தரிக்கப்பட்ட நான்கு மிருகங்களின் (தானியேல் 7:2-27) துணுக்குகளை ஒன்றுசேர்த்துச் செய்யப்பட்ட உருவமாக உள்ளது. அந்தத் தரிசனத்தில் தானியேலின் விவரிப்பில் இருந்து சில திறவுகோல் சொற்றொடர்கள் இங்கு தரப்படுகின்றன:*

> *... இதோ, வானத்தின் நாலு காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின்மேல் அடித்தது. அப்பொழுது வெவ்வேறு ரூபமுள்ள நாலு பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின. முந்தினது சிங்கத்தைப்போல இருந்தது; ... பின்பு, கரடிக்கு ஒப்பாகிய வேறே இரண்டாம் மிருகத்தைக் கண்டேன்; ... அதின்பின்பு, சிவிங்கியைப்போலிருக்கிற வேறொரு மிருகத்தைக் கண்டேன்; ... அந்த மிருகத்துக்கு நாலு தலைகளும் உண்டாயிருந்தது. அதற்கு ஆளுகை அளிக்கப்பட்டது. அதற்குப்பின்பு, இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன்; அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது; அதற்குப் பெரிய இருப்புப்பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது; அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப் பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது, அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது (தானியேல் 7:2-7).*

*தானியேல் 7ன் நான்கு மிருகங்களும் வெளிப்படுத்தின விசேஷம் 13ன் கடல் மிருகத்தில் ஒன்றிணைக்கப்பட்டுள்ள சாதுரியமான வழிமுறையைக் கண்ணோக்குங்கள்.*

**தானியேல் புத்தகத்தின் மிருகங்கள்** *(தானியேல் 7)*

**யோவானின் மிருகம்** *(வெளிப்படுத்தின விசேஷம் 13:1, 2)*




*இந்த மிருகம் யார் அல்லது என்ன[9] என்பதைப் புரிந்துகொள்வதற்கு நாம், முதலில் தானியேலினால் காணப்பட்ட மிருகங்களினால் குறிப்பிடப்பட்டது யார் அல்லது என்ன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தானியேல் 7ல் உள்ள நான்கு மிருகங்களைப் பற்றிய தரிசனம், தானியேல் 2:31-45 மற்றும் 8:3-25 ஆகியவற்றில் உள்ள தரிசனங்களுடன் தொடர்புடையதாக உள்ளது என்றும், நான்கு மிருகங்களும் நான்கு இராஜ்யங்களை குறிக்கின்றன என்றும் பெரும்பாலான கல்வியாளர்கள் ஒப்புக்கொள்ளுகின்றனர்.[10] பாபிலோனிய இராஜ்யம் (கி.மு. 606-538) முதல் இராஜ்யமாக இருந்தது (2:37, 38). மேதிய-பெர்சிய இராஜ்யம் (கி.மு. 538-330) இரண்டாவது இராஜ்யமாக இருந்த (8:20) வேளையில், கிரேக்க இராஜ்யம் (கி.மு. 330-63) மூன்றாவது இராஜ்யமாக இருந்தது (8:21). பின்பு ரோம இராஜ்யம் (கி.மு. 63 - கி.பி. 476) - கி.பி. 33ல் சபை நிலைநாட்டப் பட்டபோது நிலைவியிருந்த இராஜ்யம் - நான்காவது இராஜ்யமாக இருந்தது.[11]*

*தானியேலின் புத்தகம், இராஜா மற்றும் இராஜ்யம் என்பவற்றிற்கு இடையில் கொஞ்சம் வித்தியாசத்தையே ஏற்படுத்துகிறது. எடுத்துக் காட்டாக, நான்கு உலோகங்களால் ஆன சிலையைப் பற்றிய தரிசனத்தைத் தானியேல் விளக்கப்படுத்தியபோது, அவர் நேபுகாச்நேச்சார் அரசரிடத்தில் பின்வருமாறு கூறினார்: "பொன்னான அந்தத் தலை நீரே. உமக்குப் பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும், ..." (தானியேல் 2:38ஆ, 39). அவ்வசனப்பகுதியில் "நீரே" என்பது உண்மையில் "உமது இராஜ்யம்" (அதாவது பாபிலோனியப் பேரரசு) என்று அர்த்தப்படுகிறது; ஆனால் இராஜாவே இராஜ்யத்தின் கவன ஈர்ப்புக் கருத்தாக இருப்பதால், "நீரே" என்ற தனிநபருக்குரிய சொல்லைப் பயன்படுத்தத் தானியேல் தயங்காது இருந்தார்.*

*நான்கு இராஜ்யங்களைப் பற்றிய பட்டியலைப் பின்னோக்கிப் பார்த்து, அவைகள் பொதுவாகக் கொண்டிருந்தவை என்ன என்று கேளுங்கள். பல பண்புகள் பட்டியலிடப்படலாம்: ஒவ்வொன்றும் பலம் வாய்ந்திருந்தது; ஒவ்வொன்றும் வெற்றிகரமானதாகவும் மற்றவற்றைக் கீழ்ப்*

படுத்துவதாகவும் இருந்தது; ஒவ்வொன்றும் (அதனதன் காலத்தில்) அறியப் பட்டிருந்த உலகம் முழுவதிலும் பரந்து விரிந்திருந்தது. இருப்பினும், இவை யாவையுமே தேவனுடைய மக்களை அடக்கி ஒடுக்கின என்ற உண்மை தான் யோவானின் வாசகர்களுக்கு மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்திருக்கும். இவற்றில் சில மற்றவற்றைப் பார்க்கிலும் மிகவும் மோசமானவைகளாய் இருந்தன, ஆனால் இவையாவையும் இஸ்ரவேல் மக்களை அடிமைகளாக நடத்தின: பாபிலோனியர்கள் எருசலேமை அழித்து யூதர்களை அடிமைகளாக்கினர். மேதிய/பெர்சியர் வெற்றிகொண்டபோது, இஸ்ரவேல் மக்கள் அடிமை இனமாக நிலைத்திருந்தனர். கிரேக்கப் பேரரசின் நாட்களில், குறிப்பாக அந்த இராஜ்யத்தின் சீரியருடைய ஆளுகையின் கீழும் அந்தியோகஸ் எபிபெனஸ் என்பவரின் கீழும் இருந்தபோது யூதர்களை அடக்கி ஆளுதல் என்பது அதன் உச்சத்தை அடைந்தது. மக்கபேயர்களின் நாட்களின்போது ஒரு சுருக்கமான இளைப்பாறுதலுக்குப் பின்பு, இஸ்ரவேல் மக்கள் மீண்டும் ஒருமுறை மகுடம் அணிந்த மக்களினம் ஒன்றின் கீழ் இருக்கும் நிலையில் முடிந்தனர் - இந்த வேளையில் அவர்கள் ரோமர்களின் கீழ் இருந்தனர். "தேவனுக் கெதிரான - அரசியல் அதிகாரம்" என்பது, இந்த நான்கு இராஜ்யங்களுக்கும் ஒன்றிணைந்த பெயர்ப் பட்டியாக ஏற்புடைய வகையில் இருக்கும்.

தானியேலினால் காணப்பட்ட நான்கு மிருகங்களின் குணங்களையும் ஒன்றிணைக்கும் ஒரு மிருகத்தைப் பற்றி வாசித்த முதல் நூற்றாண்டு வாசகர்கள் என்ன நினைத்திருப்பார்கள்? எடி குளோர் அவர்கள், ''யோவானின் நாளில், இந்த மிருகம் என்பது கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய ரோமப் பேரரசுதான் என்பதில் கொஞ்சமே சந்தேகம் உள்ளது" என்று கூறினார்.[12] ஜேம்ஸ் எஃப்ரிட் என்பவர், "இந்தப் புத்தகம் (வெளிப்படுத்தின விசேஷம்) தொடக்கத்தில் யாருக்கு எழுதப்பட்டதோ, அந்த மக்களுக்கு இந்த மிருகத்தை அடையாளப்படுத்துவது பற்றிய இரகசியம் எதுவும் இருந்திராது. அது, அவர்களுக்கு எதிராகத் தனது அதிகாரத்தை இயக்கிய ரோம அரசாகவே இருந்தது" என்று எழுதினார்.[13]

13ம் அதிகாரத்தில் உள்ள மிருகத்தை ரோமப் பேரரசுதான் என்று அடையாளப்படுத்துவதற்குப் பல காரணங்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக, 17ம் அதிகாரத்தில், இந்த மிருகம் ''மகா வேசி'' ஏறியிருந்த வாகனமாயிருந்தது (வசனங்கள் 3, 7), மற்றும் அந்தப் பெண், "ஏழு மலைகளின்" மீது அமர்ந்துள்ள (வசனம் 9) "பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம்பண்ணுகிற மகா நகரமேயாம்'' (வசனம் 18) - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், ரோமாபுரி நகரமேயாம் - என்று அடையாளப்படுத்தப்பட்டு இருக்கின்றாள்.

மீண்டுமாக, மிருகத்தைப் பற்றிய விவரிப்பு, நாம் ரோமாபுரி என்றும் ரோமர்கள் என்றும் அறியும் விஷயங்களுக்குப் பொருந்துகிறது. ஆல்பர்ட் பால்டிங்கர் பின்வரும் தொகுப்புரையைக் கொடுத்தார்:

> யோவான் கூறிய கடலில் - பிறந்த மிருகம் ரோமப் பேரரசைக் குறிக்கிறது. இந்த உண்மைகளை எதிர்ப் பத்தியில் வைத்து,

*பரிசுத்தமற்ற வரலாறானது ஒவ்வொரு கருத்திலும், பரிசுத்த வசனத்திற்கு எப்படி இணையாக உள்ளது என்று காணுங்கள்.*

*ரோமாபுரி உலகத்தின் மேட்டிமையான சீமாட்டியாக இருந்தது என்று உலக வரலாறு எடுத்துரைக்கிறது: மிருகம் "சகல ஜனங்கள், கூட்டங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்" மீது அதிகாரம் கொண்டிருந்தது என்று யோவான் கூறுகின்றார்: உலக வரலாற்றின்படி, அரசாங்க (அறிக்கைத்) தாள்கள் "நமது கர்த்தரும் நமது தேவனுமானவர் விதித்து அமைத்தது" என்ற தேவதூஷணத் தலைப்புடன் டொமீஷியனின் கீழ் வெளியிடப்பட்டன. இந்த மிருகம் "பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படி அனுமதிக்கப்பட்டது" என்று யோவான் கூறுகின்றார்: கிறிஸ்தவர்கள் மிகவும் திகைப்புடன் துன்புற்ற பத்து மகா உபத்திரவங்கள் நீரோ தொடங்கி டயகிளேஷன் வரையிலும் நடந்து முடிந்தன என்று வரலாறு பதிவுசெய்கிறது.[14]*

*"இராஜா = இராஜ்யம்" என்ற சமன்பாட்டைச் சிந்தையில் கொண்டு நோக்கும்போது, இந்த மிருகம் என்பது, முதல் நூற்றாண்டின் முடிவில் கிறிஸ்தவர்களின் பிரச்சனைக்கு ஊற்றாக இருந்த டொமீஷியன் என்ற பேரரசனை குறிக்கவும் கூடும். எவ்வகையிலும், யோவானின் நாட்களில், மிருகம் என்பது "கிறிஸ்தவத்திற்கு - எதிரான அரசியல் அதிகாரமாக" இருந்தது.*

*சற்று நேரத்தில் நாம், ரோமாபுரியாயிருந்த இந்த மிருகத்தை நெருங்கிக் கண்ணோக்குவோம்; ஆனால் வலுசர்ப்பம் தனது இராணுவ நடவடிக்கைக்கு ஆளெடுக்கத் தொடங்கியபோது, அது முதலாவதாக மூழ்க்கடிக்கச்செய்யும் சக்தியொன்றை - உங்களுக்கு விருப்பமென்றால், ஒரு கொடுமைக்காரனை - பணிக்கு அமர்த்திற்று என்பதை வலியுறுத்தச் சற்றே தாமதிக்கும்படி என்னை அனுமதியுங்கள். பிசாசானவன் கிறிஸ்தவர்களை அழிப்பதற்கு மூன்று முக்கியமான வழிவகைகளைக் கொண்டுள்ளான்: பயமுறுத்துதல், வஞ்சித்தல், மற்றும் சோதித்தல். இவற்றில் முதலாவது, 13ம் அதிகாரத்தில் ரோம அரசாங்கத்தைக் கொண்டு நபர்த்துவப் படுத்தப்பட்டுள்ளது.[15]*

*ரோமப் பேரரசு நீண்ட நாட்களுக்கு முன்பாகவே அழிந்துபோயிற்று என்பது உண்மையே. ஐரோப்பாவின் பல பாகங்களில் உள்ள பழங்கால நாகரீகத்தின் சிதிலங்களின் மத்தியில் நான் நடந்து சென்றிருக்கின்றேன். அந்த இராஜ்யத்தின் மகிமை மங்கிப்போயிருக்கிறது; அது இப்போது இருப்பதில்லை - ஆனால் அது, 13ம் அதிகாரமானது உங்களுக்கும் எனக்கும் நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருப்பதில்லை என்று அர்த்தப்படுத்துவதில்லை. இவ்வசனப்பகுதியானது "காதுள்ள எவருக்கும்" உரைக்கப்படுகிறது என்பதை 9ம் வசனம் தகவலாகத் தெரிவிக்கிறது. பயமுறுத்துதல் என்பதைச் சாத்தான் தனது வேலையை விவரிக்கப் பயன்படுத்திய விஷயமானது ரோமப் பேரரசை அவன் தனது கைப்பாவையாக்கிக் கொண்டதுடன் மட்டுப்பட்டிருப்பதில்லை.[16] இன்றைய நாட்களிலும்கூடச் சிலர், மதசுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும்*

அரசாங்கம் உள்ள நாடுகளில் வாழ்கின்றனர். மற்றவர்கள் வியாபாரத்தில் வஞ்சகமான செயல்முறைகளில் முதலாளிகளுடன் ஒத்துப்போகாத வேலைக்காரர்களை வேலையை விட்டு நீக்கிவிடும் நாணயமற்ற முதலாளிகளைக் கொண்டுள்ளனர். இன்னும் பிறர், வேதாகமத்தின் கிறிஸ்தவத்தைத் தழுவினால் கைவிட்டுவிடும் குடும்பங்களைக் கொண்டுள்ளனர். பயமுறுத்தப்படுதல் என்பது பிசாசின் கோட்டையில் இன்னமும் ஒரு முக்கியமான ஆயுதமாகவே உள்ளது.

*"காதுள்ளவனெவனோ அவன் கேட்கக்கடவன்" (13:9).*

## பாடம் மூன்று: பிசாசானவன் வலிமையைப் பயன்படுத்துகின்றான் (13:1, 2, 4, 7)

கிறிஸ்தவர்களைப் பயமுறுத்துவதற்குச் சாத்தான் பல்வேறு வழிமுறைகளைப் பயன்படுத்துகிறான். நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, வலிமையைப் பயன்படுத்துதல் என்பது ஒரு வழிமுறையாகவே உள்ளது. மிருகத்தைப் பற்றிய விவரிப்பையும் அதன் மாபெரும் வல்லமையையும் மீண்டும் கண்ணோக்குங்கள்:

மிருகமானது, வலுசர்ப்பத்தைப்போல் ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், பல கிரீடங்களையும் கொண்டிருந்தது (13:1).[17] பின்வரும் அதிகாரங்கள் ஒன்றில், மிருகமானது - வலுசர்ப்பத்தைப் போலவே - சிகப்பு நிறமாக உள்ளது என்று நாம் கற்றுக்கொள்வோம் (17:3). நீங்களும் நானும் தேவனுடைய சாயலாக உண்டாக்கப்பட்டிருப்பது போன்றே (ஆதியாகமம் 1:26), மிருகமும் தன்னை படைத்தவனுடைய சாயாலாகவே இருந்தது. வலுசர்ப்பத்தைப் பற்றி நாம் படித்தபோது, அதன் இரத்தச் சிகப்பான நிறம் அதன் கொலைகார நோக்கங்களைச் சுட்டிகாண்பித்தது என்று கருத்துத் தெரிவித்திருந்தோம்; அதன் ஏழு தலைகளும் மகா தந்திரத்தையும் சூழ்ச்சியையும் குறிக்கின்றன; அதன் பத்துக் கொம்புகள், அதன் மகா வல்லமையைக் குறிக்கின்றன; அதன் பல கிரீடங்கள், அதன் மாபெரும் அதிகாரத்தைக் குறிக்கின்றன.[18] இந்தக் குணங்கள் யாவையும் இப்போது மிருகத்திற்கு மாற்றப்பட்டன. "வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும்[19] மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது"[20] (வசனம் 2ஆ). "ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகள்மேலும்[21] அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது" (வசனம் 7ஆ). சாத்தான் இயேசுவுக்குக் கொடுக்க இருந்தவற்றை (மத்தேயு 4:8, 9), அவன் மிருகத்தின் மீது பொழிந்தான்.

மிருகங்களின் ஒன்றிணைக்கப்பட்ட அம்சங்களும், வல்லமையையும் பலத்தையும் குறிக்கின்றன: கடல் மிருகமானது சிறுத்தையைப்[22] போல வேகமானதாகவும், கரடியைப் போல பலம்வாய்ந்ததாகவும் சிங்கத்தைப் போல் மூர்க்கமானதாகவும், எந்த ஒரு காட்டு மிருகத்தைப் போலவும் தீங்கு விளைவிப்பதாகவும் இருந்தது.[23]

மேலும், இந்த மிருகத்தின் பலமானது இதன் தாக்கப்படாத தன்மையில் காணப்படுகிறது.[24] இது ஒரு ''பட்டயத்தில்'' இருந்து

"சாவுக்கேதுவான காயத்தை" பெற்றிருந்தாலும், முற்றிலும் குணமாயிற்று, இந்த நிகழ்ச்சியானது மக்கள் கூட்டத்தை ஆச்சரியப்படுத்திற்று (வெளிப்படுத்தின விசேஷம் 13:3, 12, 14, 15).

இந்த மிருகமானது தேவனைவிடப் பலம் வாய்ந்ததாக காணப்பட்டது, உண்மையில் - ஏனெனில் இவன் விளைவுகள் எதுவுமின்றி தேவனைத் தூஷிக்கக் கூடியதாக காணப்பட்டான்: 1ம் வசனம், "அதின் தலைகளின்மேல்[25] தூஷணமான நாமமும் இருந்தன" என்று கூறுகிறது. இந்த "தூஷணமான நாமம்" என்பவை, அனேகமாக, ரோமப் பேரரசர்கள் தங்களுக்குத் தாங்களே தகுதிப்படுத்திக்கொண்ட தெய்வீகத்துவப் பெயர்களாய் இருக்கலாம்.

> ஒவ்வொரு பேரரசனும், "தெய்வீகம்" என்று அர்த்தப்படுகிற divus அல்லது sebastos என்று அழைக்கப்பட்டான். தேவனுடைய அல்லது தேவகுமாரனுடைய பெயரே கூட அடிக்கடி பேரரசர்களுக்குக் கொடுக்கப்பட்டது; மற்றும் நீரோ தனது நாணயங்களில் தன்னை உலகத்தின் இரட்சகர் என்று அழைத்துக்கொண்டான். ... மேலும், பிற்காலத்தியப் பேரரசர்கள் தங்கள் பட்டப் பெயர்களை dominus, என்ற இலத்தீன் வார்த்தையில் இருந்தோ அல்லது அதற்குச் சமமான kurios என்ற கிரேக்க வார்த்தையில் இருந்தோ எடுத்துக் கொண்டனர், இவ்விரு வார்த்தைகளுமே பழைய ஏற்பாட்டில் கர்த்தர் என்று அர்த்தப்படுகின்றன. இவை தேவனுக்கு பட்டப்பெயர்களாகவே உள்ளன, மற்றும் புதிய ஏற்பாட்டில் இது இயேசுகிறிஸ்துவின் விசேஷித்த பட்டப்பெயராக உள்ளது.[26]

மீண்டுமாக, 13:5, மிருகத்தின் வாய் "பெருமையானவைகளையும் தூஷணங்களையும்" பேசிற்று என்று கூறுகிறது. "தூஷணம் பேசுதல்" என்பது "எதிராக பேசுதல்" என்பதாக உள்ளது. 13:6ல் நாம், மிருகம் எதிராகப் பேசியது என்ன என்பதை அறிகின்றோம்: "அது தேவனைத் தூஷிக்கும்படி தன்வாயைத் திறந்து, அவருடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும், (அதாவது[27]) பரலோகத்தில் வாசமாயிருக் கிறவர்களையும் தூஷித்தது." "அவரது வாசஸ்தலம்" (ஆங்கிலத்தில் இது "His tabernacle" என்றுள்ளது) என்பது "அவர் வாழும் இடம்"[28] என்று அழைக்கப்படக்கூடும். தேவன் தமது மக்களுக்குள் வாசம் செய்வதால் (1 கொரிந்தியர் 3:16) மற்றும் கிறிஸ்தவர்கள் பரலோகத்தில் தங்கள் குடியிருப்பைக் கொண்டுள்ளதால் (பிலிப்பியர் 3:20), இவ்வசனப்பகுதி அனேகமாக, சபையைப் பற்றிப் பரப்பப்பட்ட பொய்களைக் குறிப்பதாய் இருக்கலாம்.[29]

மிருகமானது தான் விரும்பிய எல்லாவற்றையும் செய்யக்கூடியதாக இருந்தது, யாராலும் அதைத் தடைப்படுத்த இயலவில்லை என்பதே 13:1-8 வசனப்பகுதியால் விட்டுச் செல்லப்பட்டுள்ள மனப்பதிவாக உள்ளது. இவ்விதமாக மக்கள் கூட்டம். "... அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்?" என்று ஆச்சரியப்பட்டது (வசனம் 4ஆ). உண்மையிலேயே யாராலும் - உறுதியாகவே, சிறிய கிறிஸ்தவர்களால் - அதை எதிர்த்துச் செயல்பட

*இயலாதிருந்தது. "மேலும், பரிசுத்தவான்களோடே[30] யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது" (வசனம் 7அ). "ஜெயிக்கும்படி" என்பது "வெற்றி" என்பதற்கான (கிரேக்க) வார்த்தையாகிய nike, என்பதன் வினைவடிவத்தில் இருந்து வருகிறது. மிருகமானது, மலைப்பகுதியின் கீழ் உருண்டு வரும்போது, தனது பாதையில் இருந்த யாவரையும் விழச்செய்யும் பெரிய பாறைபோல் இருந்தது. அது வெற்றிகொள்ளப்பட இயலாததாகக் காணப்பட்டது.[31]*

*ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டபடி, சாத்தான் தனது நோக்கத்திற்குப் பொருத்தமாகும்போது இன்றைக்கும் சக்தியைப் பயன்படுத்துகின்றான். நான் பல விவரிப்புகளைக் கொடுத்துள்ளேன்; நீங்கள் இன்னும் அதிகமான வற்றைக் கொடுக்க முடியும் என்பதில் சந்தேகம் இல்லை.[32] இருப்பினும், இவ்விடத்தில் நான், "பிசாசானவன் தனது சித்தத்திற்கு உங்களைப் பணியும்படிக் கட்டாயப்படுத்த முயற்சி செய்தால், அதைக் குறித்து ஆச்சரியப்பட வேண்டாம்" என்று மாத்திரம் கூற விரும்புகின்றேன்.*

*"காதுள்ளவனெவனோ அவன் கேட்கக்கடவன்" (13:9).*

## *பாடம் நான்கு: பிசாசானவன் சகநபர்களின் வலியுறுத்தத்தைப் பயன்படுத்துகின்றான் (13:3, 4, 8)*

*மற்றவர்கள் உங்களுடன் நிலைநிற்கும்போதுகூட, வலுயுறுத்தத்தை எதிர்த்து நிற்குதல் என்பது கடினமானதாக உள்ளது. கும்பலானது உங்களுக்கு எதிராக நிற்கும்போது, இது இருமடங்கு கடினமானதாக உள்ளது. பெரும்பான்மையானவர்கள் "கேட்டிற்கு இட்டுச் செல்லும் விசாலமான வழியில்" இருக்கின்றனர் என்று ஒருமுறை இயேசு கூறினார் (மத்தேயு 7:13). நமது வசனப்பகுதியானது அவரது கூற்றின் மிகச் சரியான தன்மையை உறுதிப்படுத்துகிறது: "பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி … பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்" (வசனங்கள் 3ஆ-8அ).*

*மிருகத்தை (மக்கள்) வணங்குதல் பற்றி நாம் நமது அடுத்த பாடத்தில் கலந்துரையாடுவோம்,[33] ஆனால், இப்போதைக்கு நாம், கும்பலின் திகைப்பை, வழிபாட்டை, மதித்தலை மற்றும் பாராட்டை உற்று நோக்கு வோம் - இவை யாவும் ஆராதனையின் பகுதிகளாக உள்ளன. " 'மிருகத்திற்கு ஒப்பானவன் யார் … ?' என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள்" (வசனம் 4ஆ). அவர்களின் வார்த்தைகள், " 'கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்?' என்ற மாபெரும் கேள்விக்கு (யாத்திராகமம் 15:11) வெறுப்புமிக்க ஏளனமாக" இருந்தன.[34]*

*மிருகமானது உண்மையான மார்க்கத்தைப் போல் ஒருமுறைக்கு மேல் நடித்தது. எடுத்துக்காட்டாக, குணமாக்கப்பட்ட காயம் பற்றிய விபரமானது, இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் வர்ணனையாக உள்ளது: "அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க்[35]*

*காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே ...'' (வசனம் 3). மூலமொழியில், ''சாவுக்கேதுவாக'' என்ற சொற்றொடர், ஆட்டுக்குட்டியானவரின் மரணத்திற்கு ஏதுவான காயத்தை விவரிக்க 5:6 மற்றும் 13:8ல் பயன்படுத்தப்பட்ட அதே சொற்றொடராகவே உள்ளது. 13:3 வசனமானது, முதல் நூற்றாண்டின் இறுதியில் மூடநம்பிக்கை யுள்ளவர்களின் மத்தியில் பரப்பப்பட்டிருந்த "நீரோ ரெடிவிவஸ்'' என்ற புராணத்திற்கு ஏதோ ஒரு வழியில் தொடர்புடையதாக உள்ளது என்று பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள் நம்புகின்றனர்.[36] இந்தப் புராணத்தின்படி, கி.பி. 68ல் இறந்துபோன நீரோ, தனக்கு எதிராக திரும்பியிருந்த ரோம இராணுவத்தைத் தண்டிப்பதற்குத் திரும்பவும் வருவான். இவ்வசனப் பகுதியானது, "உயிர்ப்பிக்கப்பட்ட நீரோ'' என்று ஒருகருத்தில் கருதப்பட்ட டொமீஷியனைக் குறிக்கிறது என்று சில எழுத்தாளர்கள் நினைக்கின்றனர். ரோம வரலாற்றாளரான தெர்த்துல்லியன் என்பவர், கிறிஸ்தவர்களின்மீதான டொமீஷியனின் துன்புறுத்தலைக் குறிப்பிட்டு, அவனை ''நீரோவின் வகையிலான கொடுமைக்குணம் கொண்ட மனிதன்'' என்று அழைத்தார்.[37] இதற்கு மறுபுறத்தில், இவ்வசனப்பகுதியானது, ரோமப்பேரரசு அவ்வப்போது தனது மரணப்படுக்கையில் இருந்தது, ஆனால் உயிர்பிழைத்து இன்னமும் அதிக பலமுள்ளதாகத் திரும்பி வந்ததாகக் காணப்பட்டது என்று மாத்திரம் அர்த்தப்படலாம்.*

*ஒவ்வொரு விஷயத்தின் அர்த்தத்தையும் நாம் சிக்கு எடுத்தாலும் இல்லையென்றாலும், முடிவு விளைவைக் காணுதலென்பது சுலபமானதாக உள்ளது: உலகம் முழுவதும், இந்த மிருகத்தைப் பார்த்து வியப்புற்றது. அவர்கள் இதை வணங்கி இதைப் பின்பற்றினர். இது இவனது கட்டளைகளை எதிர்த்து நிற்பதைக் கிறிஸ்தவர்களுக்கு எவ்வளவு கடினமானதாக்கியிருக்கும்!*

*பிசாசானவன் தனது சித்தத்தின்படி நம்மை உருப்படுத்துவதற்கு நமது சகமனிதர்களின் வலியுறுத்தத்தை இன்னமும் பயன்படுத்துகின்றானா? அவன் அதைச் செய்கின்றான் என்று நீங்கள் அறிவீர்கள். ''இதை ஒவ்வொருவரும் செய்கின்றனரே!'' என்று அணிவகுக்கும் கூக்குரலை நாம் இன்னமும் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். நமக்கு நாமே அவ்வப்போது இரண்டு வழிகளைப் பற்றி நினைவூட்டிக் கொள்வது முக்கியமானதாக உள்ளது. உண்மையில், பெருங்கூட்டத்தார் "கேட்டிற்கு இட்டுச் செல்லும் விசாலமான வழியில்'' இருக்கையில், வெகுசிலரே "ஜீவனுக்கு இட்டுச் செல்லும் குறுகலான வழியில்'' இருக்கின்றனர் (மத்தேயு 7:13, 14). நமது வேதாகமங்களில் யாத்திராகமம் 23:2அ வைக் குறித்துவைத்துக்கொள்ளவும் நாம் விரும்பலாம்: ''தீமைசெய்ய திரளானபேர்களைப் பின்பற்றா திருப்பாயாக.''*

*"காதுள்ளவனெவனோ அவன் கேட்கக்கடவன்'' (13:9).*

## பாடம் ஐந்து: பிசாசானவன் மட்டுப்படுத்தப் பட்டவனாக இருக்கின்றான் (13:5, 7)

இதுவரைக்கும் நாம் முன்வைத்துள்ள சத்தியங்கள் இருதயத்திற்கு இதமற்றவைகளாய் இருக்கக்கூடும் - ஆனால், நமது வசனப்பகுதியில், என்ன நேர்ந்தாலும் தேவன் எல்லாவற்றையும் தம் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டிருக்கின்றார் என்று நம்மை அறிய அனுமதிக்கிற குறிப்புகளைத் தவறவிட்டுவிடாதீர்கள். "அவனுக்குக் கொடுக்கப்பட்டது" என்ற அல்லது அதற்குச் சமமான சொற்றொடர் ஒரு குறிப்பாக உள்ளது: "வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது" (வசனம் 5அ); "அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது" (வசனம் 5இ); "யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது" (வசனம் 7அ). நமது பாடத்தொடரில் முன்பே நாம் குறிப்பிட்டபடி, இந்தச் சொற்றொடரானது, எவரொருவராலும் - தேவனுடைய விரோதியொருவனாலும் கூட - உரிமை கொள்ளப்பட்டுள்ள அதிகாரம் என்பது அவனுக்குத் தேவன் அனுமதித்துள்ளதாகவே இருக்கிறது.[38]

"நாற்பத்தியிரண்டு மாதம்" என்ற உருவகம் இன்னொரு குறிப்பாக உள்ளது (வசனம் 5ஆ). 11ம் அதிகாரம் தொடங்கி, இந்த அடையாளத்துவ எண்ணின் பல்வேறு வடிவங்களை நாம் கண்டுள்ளோம் (இது இப்புத்தகத்தில் கடைசி முறையாக இங்கு 13:5ல் உள்ளது). இந்நேரம் நீங்கள் இதன் அர்த்தத்தை மனப்பாடம் செய்திருப்பீர்கள்: இது "$3^1/_2$" ஆண்டுகள் என்று கூறுவதற்கு மறைமுகமான வழியாக உள்ளது, மற்றும் "$3^1/_2$" என்பது சோதனைகள், உபத்திரவங்கள் - அத்துடன் நாளைக்கு மேன்மையான நாள் உண்டு என்ற நம்பிக்கை - ஆகியவற்றிற்கான எண்ணாக உள்ளது. இந்த அடையாளத்தை மிருகத்தின் செயல்களுக்கு நடைமுறைப்படுத்தும்போது, இது தேவன் இந்த மிருகம் இடர்ப்பாடு தர அனுமதித்தார் - ஆனல் அந்த இடர்ப்பாடு மட்டுப்படுத்தப்பட்ட வகையில், குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரம் இருக்கும் என்று அறிவிக்கிறது. ரோமாபுரி வல்லமை நிறைந்ததாக இருக்கலாம், ஆனால் தேவனே, "ஜாதிகள்மேல் அரசாளுகிறார்"; தேவன் தமது "பரிசுத்த சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார்" (சங்கீதம் 47:8).

"காதுள்ளவனெவனோ அவன் கேட்கக்கடவன்" (13:9).

## பாடம் ஆறு: பிசாசானவன் முடிவில் தோல்வியடைவான் (13:9, 10)

1முதல் 8வரையிலான வசனங்களில் நாம் முன்னும் பின்னுமாகச் சென்றிருக்கின்றோம், ஆனால் கடைசியில் நாம் 9ம் வசனத்திற்கு வருகின்றோம்: "காதுள்ளவனெவனோ அவன் கேட்கக்கடவன்." கர்த்தர் நமக்கு வைத்துள்ள விசேஷ செய்தி என்ன? 10ம் வசனத்தை கவனமாகக் கேளுங்கள்: "சிறைப்படுத்திக்கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப் போவான்; பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே

கொல்லப்படவேண்டும். பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும்."

10ம் வசனத்தின் தொடக்கமானது எரேமியா 15:2ஐப் பிரதிபலிக்கிறது (எரேமியா 43:11ஐயும் காணவும்), அதேவேளையில் "பட்டயம்" என்ற குறிப்பானது மத்தேயு 26:52ல் பேதுருவுக்கு இயேசுவின் வார்த்தைகளையும் நமக்கு நினைவூட்டுகிறது. இவ்வசனத்திற்குப் பல விளக்கங்கள் சாத்தியமானவைகளாக உள்ளன.[39] (1) ஆங்கில வேதாகமத்தில் உள்ள "any-one" என்ற இரு குறிப்புகளும் கிறிஸ்தவர்களைக் குறிப்பிடக்கூடும். அது சரியான விளக்கமாய் இருந்தால், கிறிஸ்தவர்கள் எதிர்காலத்தில் தங்களுக்கு வைக்கப்பட்டுள்ளவற்றிற்காக[40] எதிர்ப்பின்றி (துன்பங்களை) ஏற்றுக் கொள்ளும்படி கர்த்தர் கூறினார் என்றாகிறது, அவர்கள் துன்புறுத்தப் படும்போது பட்டயத்தைக் கொண்டு தங்களைத் தற்காத்துக் கொள்ள முயற்சி செய்யக்கூடாது.[41] (2) ஆங்கில வேதாகமத்தில் உள்ள "anyone" என்ற இரு குறிப்புகளும், அவர்களைத் துன்புறுத்துபவர்களைக் குறிக்கக் கூடும். விஷயம் அதுவாக இருந்தால், இவ்வசனப்பகுதியானது, கிறிஸ்தவர்களின் விரோதிகள் தண்டிக்கப்படுவார்கள், அதாவது நியாயம் வெளியிடப்படும் என்று அவர்களுக்கு உறுதியளிக்கிறது. (3) ஆங்கில வேதாகமத்தில் முதலாவது "anyone" என்பது கிறிஸ்தவர்களைக் குறிப்பதாயிருக்கையில், இரண்டாவது "anyone" என்பது அவர்களை வதைப்பவர்களைக் குறிப்பிடக்கூடும். இது இரு சிந்தனைகளையும் ஒன்றிணைப்பதாயிருக்கும்: யோவானின் வாசகர்களுக்கு, அவர்கள் துன்புறத் தயாராயிருக்க வேண்டும், ஆனால் முடிவில் அதற்குப் பொறுப்பாய் இருந்தவர்கள், அவர்கள் கொடுத்திருந்ததைப் பெறுவார்கள் என்று கூறப்பட்டது.

இந்த விளக்கங்கள் யாவும் உடனடியாக சந்தர்ப்பப் பொருளுக்கும் வெளிப்படுத்தின புத்தகத்தின் முழுமையான நோக்கத்திற்கும் உகந்தவைகளாய் இருக்கின்றன. 10ம் வசனத்தில் உள்ள இவ்விரு "anyone" என்பவைகளில் ஒன்றோ அல்லது இரண்டுமோ, கிறிஸ்தவர்களை ஒடுக்கிக் கொண்டிருந்தவர்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று நான் நினைக்கின்றேன்: (1) இதே வார்த்தைகளை எரேமியா பேசியபோது, அவைகள் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்தவர்களைக் குறிப்பிட்டன. இவ்விதமாக, இராபர்ட் முல்ஹாலன்ட் என்பவர் "கலகக்காரர்களுக்கான ஒரு வார்த்தை பரிசுத்தவான்களுக்கு எவ்வாறு நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கும்?" என்று கேட்டார்.[42] (2) இவ்விடத்தில் "பட்டயம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, ரோம இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்ட நெருக்கமான யுத்த வாளைக் குறிப்பிட்டது, இது 6ம் அதிகாரத்தில் இரண்டாவது குதிரை வீரருக்குக் கொடுக்கப்பட்ட பட்டயமாக உள்ளது.[43] (3) அடுத்த அதிகாரத்தில் அவர்களின் விரோதிகள் தண்டிக்கப்படுவார்கள் என்ற உண்மையானது "பரிசுத்தவான்களுடைய பொறுமை" என்று அழைக்கப்படுகிறது (14:11, 12). (4) இது வாசகர்களுக்கு மாபெரும் ஆறுதலாய் இருந்திருக்கும் (என்று நான் நம்புகின்றேன்). இருப்பினும் வார்த்தைகள் கண்ணோக்கப்படுகின்றன, கிறிஸ்தவர்கள் "மன உறுதியையும் உண்மைத்தன்மையையும்" பராமரிக்கும்

*வரையிலும் பொல்லாங்கின் சக்திகள் வெற்றிகொள்ள முடியாது என்ற கருத்து இங்கு மறைபொருளாய் உள்ளது.*[44]

*''பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும்'' என்ற வார்த்தைகளில், 10ம் வசனத்தின் அடிப்படைச் செய்தி காணப்படுகிறது. இவ்வசனப்பகுதியானது, கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்விலும் விசுவாசத்திலும் உறுதியாய் நிலைத்திருக்க அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.* The Simple English™ Bible *என்ற வேதாகமத்தில்,* "This means that holy people must endure and be faithful" [*அதாவது, "இது பரிசுத்த மக்கள் சகிப்புத்தன்மையுடனும் விசுவாசத்துடனும் இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறது''*] *என்றுள்ளது. மிருகத்தைப் பின்பற்றுதல் என்பதற்கு சகிப்புத்தன்மை தேவையில்லை, ஆனால் கிறிஸ்துவை பின்பற்றுவதற்கு சகிப்புத்தன்மை தேவைப்படுகிறது.*

*"காதுள்ளவனெவனோ அவன் கேட்கக்கடவன்" (13:9).*

## *முடிவுரை*

*முன்னதாக நான் 8ம் வசனத்தைக் குறிப்பிட்டபோது, அதன் முழுமையையும் நான் மேற்கோள் காண்பிக்கவில்லை. முழுவசனமும், ''உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்'' என்றுள்ளது. சர்தை சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தை நாம் படிக்கையில், ''ஜீவபுஸ்தகம்'' பற்றி நாம் வாசித்தோம் (3:5); இது உண்மையுள்ளவர்களைப்பற்றிய பதிவேடாக உள்ளது (20:15ஐக் காணவும்).*[45] *இந்தச் சொற்றொடர், துன்புற்ற கிறிஸ்தவர்களைத் தேவன் மறக்கமாட்டார் என்று அவர்களுக்கு உறுதியளித்தது!*

*மூல வசனத்தில், "உலகத்தோற்றமுதல்" என்ற சொற்றொடரானது, ''பெயர் எழுதப்பட்டிராதவர்கள்'' என்றோ அல்லது ''அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவருடைய'' என்றோ மாற்றப்படக்கூடும்,*[46] *எப்படி பார்த்தாலும், மனிதனின் மீட்புக்கான தேவனுடைய திட்டம் ஒரு பின்சிந்தனையாக இருந்ததில்லை; மாறாக, அது "தேவனுடைய மகத்தான முன்சிந்தனையாக''*[47] *இருந்தது என்பதே செய்தியாக உள்ளது. அது மனிதனை அவர் பூமியின்மீது வைப்பதற்கு முன்னதாகவே அவரது சிந்தையில் இருந்தது.*[48]

*8ம் வசனத்தின் சொற்றொடராக்கம், ஒவ்வொரு கிறிஸ்தவரையும் விசேஷித்தவராக உணரச் செய்ய வேண்டும், ஆனால் நான், இவ்வசனத்தை ஒரு முக்கியமான சிந்தனையை மனதில் பதிய வைக்கப் பயன்படுத்த விரும்புகின்றேன். பூமியில் இரு வகையான மக்கள் உள்ளனர்: ஜீவபுஸ்தகத்தில் தங்களின் பெயர்கள் எழுதப்பட்டு இருப்பவர்கள், மற்றும் அதில் தங்களின் பெயர்கள் எழுதப்படாது இருப்பவர்கள்.*[49] *உலகத்தில் பிரிவுகள் - நாட்டினம் சார்ந்த, மக்களினம் சார்ந்த, நிதிநிலை சார்ந்த, மற்றும் இவைபோன்று - ஏராளமாக உள்ளன, ஆனுல் முடிவில், ஒருவரின் பெயர் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளதா இல்லையா என்பதே*

பொருட்படுத்தப்படுவதாக இருக்கும்.

உங்கள் பெயர் ஜீவபுஸ்தகத்தில் உள்ளதென்றால், நாட்கள் மோசமாகும்போதும் நீங்கள் அதைக் கடந்துசெல்ல முடியும். பிசாசும் அவனது முகவர்களும் உங்களை அலைக்கழிக்கக்கூடும் - உங்களைக் கொல்லவும்கூடும் - ஆனால் நீங்கள் மகிமையில் ஒரு இல்லத்தைக் கொண்டிருக்கின்றீர்கள் என்று அறிகின்றீர்கள். உங்கள் பெயர் ஜீவபுஸ்தகத்தில் இல்லையென்றால், நீங்கள் சந்தோஷமாய் வாழும் ஒருசில விரைவான நாட்கள் பற்றிய நம்பிக்கையை மாத்திரமே அதிகமாகக் கொண்டிருப்பீர்கள், அதைத் தொடர்ந்து வேதனை மற்றும் பெருந்துக்கமான நித்தியம் உள்ளது. எனது பெயர் அங்குள்ளது என்ற நம்பிக்கை எனக்கு இல்லையென்றால், நான் தயங்கமாட்டேன். நான் எனது ஆத்துமாவின் தேவைகளைக் குறித்து கவனிக்கத் துரிதப்படுவேன்.[50] "நீயும் போய் அந்தப்படியே செய்" (லூக்கா 10:37ஆ).

---


## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

இந்த பாடத்தில் நான், வசனத்திற்கு பின் வசனமாக விளக்கப்படுவதற்குப் பதிலாக, வசனப்பகுதியில் இருந்து திறவுகோல் பாடங்களை முக்கியத்துவப்படுத்தினேன். இரண்டு காரணங்களுக்காக நான் இதைச் செய்தேன். முதலாவது, வெளிப்படுத்தின விசேஷம் 13:1-10 வசனப்பகுதியானது, போதிக்கப்படும் பாடத்தின் மீதுள்ள கண்ணோக்கை நாம் இழந்துபோகுமளவுக்கு விபரங்களின் கலந்துரையாடலில் நாம் அதிகம் மூடப்படக்கூடிய வசனப்பகுதிகளில் ஒன்றாக உள்ளது. பிரதான கருத்துக்கள் பலவற்றின் மீது வலியுறுத்தம் செலுத்தி நான் அதைத் தவிர்க்க முயற்சி செய்தேன். இரண்டாவது, எல்லா வேளைகளிலும் ஒரே மாதிரியான செயலைச் செய்வதற்கு நான் விரும்புவதில்லை; பன்முகத்தன்மையை நான் விரும்புகின்றேன். நீங்கள் வசனத்திற்குப் பின் வசனமாகப் போதிக்க/ பிரசங்கிக்க விரும்பினால், வார்ரென் வயர்ஸ் என்பவரின் பிரிவுகளை நீங்கள் விரும்பலாம்: (1) Wonder ஆச்சரியம் (வசனம் 3); (2) Worship வணங்குதல் (வசனம் 4); (3) Words வார்த்தைகள் (வசனங்கள் 5, 6); (4) War யுத்தம் (வசனங்கள் 7-10).[51] சார்ல்ஸ் ரைரீ என்பவர் பின்வரும் திறவுகோல் வார்த்தைகளைப் பயன்படுத்தினார்: (1) Appearance தோற்றம் (வசனங்கள் 1, 2); (2) Acclaim உரிமைகோருதல் (வசனங்கள் 3, 4); (3) Activity நடவடிக்கை (வசனங்கள் 5-7அ); (4) Authority அதிகாரம் (வசனங்கள் 7ஆ-10).[52]

ஒரு வகுப்பில் போதிக்கும்போது, யோவானின் நாட்களில் இருந்த கிறிஸ்தவர்கள் - மற்றும் இன்றைய நாட்களில் நமக்கு இந்த அதிகாரத்தின் முக்கியத்துவம் - என்ற கருத்திற்கு, 13ம் அதிகாரத்தை தொகுத்துரைக்க நான் ஒரு வரைவட்டவணையைப் பயன்படுத்துகின்றேன். நீங்கள் "இரண்டு மிருகங்கள் (வலுசர்ப்பத்தின் கூட்டாளிகள்) என்ற (அல்லது இதைப்போன்ற) வரைவட்டவணையை இந்தப்பாடத்தில் அறிமுகப்

படுத்தவும் பின்பு அடுத்த பாடத்திற்கும் இதைத் தொடர்ந்து பயன்படுத்தவும் விரும்பலாம்.

நீங்கள் போதிக்கையில், தரிசனங்களை வரைபடமாக்க நீங்கள் விரும்பினால், இங்கு தரப்பட்டுள்ள வரைபடத்தை நீங்கள் மதிக்கலாம்/ விரும்பலாம். இது, ஆஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள மெக்குயீரிஸ் என்ற இடத்தைச் சேர்ந்த பிரசங்கப்பள்ளியின் முன்னாள் மாணவர் ஒருவரால் வரையப்பட்டது. இவர் வரைந்த இம்மிருகம் ஏழு தலைகள் கொண்டதாக, ஆனால் ஒரே வாயைக் கொண்டுள்ளதாக இருப்பதைக் கவனியுங்கள் (13:2, 5, 6; 16:13).




ஜான் ஸ்டேசி என்பவர், 13ம் அதிகாரம் பற்றிய தமது பாடத்தை, “தீய திரித்துவம்” என்று அழைத்தார். D. T. நைல்ஸ், “பிசாசின் யுத்தத் திட்டம்” என்ற தலைப்பை ஆதரித்தார். “பிசாசின் கூட்டாளிகள்,” “பிசாசின் வலது கைபோன்ற மனிதர்கள்,” மற்றும் “சாத்தானின் பக்க உதைகள்” என்பவை இந்த அதிகாரத்திற்கான சாத்தியக்கூறுள்ள மற்ற தலைப்புகளாக உள்ளடங்குகின்றன.

| **இரண்டு மிருகங்கள்**<br>**(வலுசர்ப்பத்தின் கூட்டாளிகள்)** | | | |
|---|---|---|---|
| கூட்டாளிகள் | செல்வாக்கின் நெறிகள் | யோவானின் நாட்களில் விசேஷ முக்கியத்துவம் | எந்தகாலத்திற்கும் நடைமுறைப்பயன்பாடு |
| முதலாம் மிருகம்: கடல் மிருகம் “மிருகம்” | வல்லமை & நிர்ப் பந்தித்தல் (“கிறிஸ் தவத்திற்கு - எதிரான அரசியல் வல்லமை) | பேரரசனால் தலைமை தாங்கப்பட்ட ரோமப் பேரரசு | பயமுறுத்துதல்: துன்புறுத்தல் சகமனிதர்களின் நிர்பந்தம் |
| இரண்டாம் மிருகம்: பூமியிலிருந்து எழும்பிய மிருகம் “கள்ளத் தீர்க்கதரிசி” | கள்ளபோதனை மற்றும் சூழ்ச்சி (“கிறிஸ்தவத்திற்கு - எதிரான மதம்”) | கொன்சீலியா: பேரரச வனக்கத்தை அமுல்படுத்தும் முகமை | வஞ்சனை: கள்ள போதகங்கள் மற்றும் தத்துவங்கள் |

## "நீரோ ரெடிவிவஸ்" புராணம்

கி.பி. 68ல் நீரோ இறந்த பின்பு, அவனது உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது, ஆனால் அவன் இறந்துபோனான் என்பதை மக்களில் பலர் நம்ப மறுத்தனர்.[53] அவன் பார்த்தியர்கள் மத்தியில் சென்றிருந்தான் மற்றும் ரோமர்களை அழிப்பதற்கு அவன் பார்த்தியச் சேனை ஒன்றுக்குத் தலைமை தாங்குபவனாக விரைவில் திரும்பி வருவான் என்ற ஒரு புராணம் நடப்புக்கு உரியதாயிற்று. அவன் மரித்தோரில் இருந்து எழுப்பப்படுவான் என்று சிலர் நம்பினர். ரோம வரலாற்றாளரான டேசிட்டஸ் என்பவர், நீரோ என்று உரிமைகோரிய மூன்று ஏமாற்றுக்காரர்களைப் பற்றி அறிக்கை செய்தார்.

இந்தப் புராணம், நீரோவின் மறுவருகையானது எருசலேமை வீழச் செய்ததற்காக ரோமாபுரிக்குத் தண்டனை அளிப்பதாயிருக்கும் என்ற சிந்தையில் ஆறுதல் அடைந்த சில யூதர்களிடத்தில், எல்லைக்கு உட்பட்ட செல்வாக்குக் கொண்டிருந்தது. தொடக்காலக் கிறிஸ்தவ எழுத்தாளரான கிறிஸோஸ்தோம் என்பவர் இந்தப் புராணக்கதையைப் பற்றி அறிந்து இதை ஏளனம் செய்திருந்தார்.

இந்தப் புராணம், வெளிப்படுத்தின உருவகத்தின் மீது செல்வாக்கு செலுத்தியிருந்தாலும் இல்லையென்றாலும், புறதெய்வ வணக்கத்தாரின் புராணம் ஒன்றை உண்மையானது என்று யோவான் நம்பியிருக்கமாட்டார். ஒருவேளை நீரோவின் துன்புறுத்தும் கொள்கையானது - டொமீஷியனின் ஆட்சியின்கீழ் நடந்தது போன்று - இன்னொரு தலைவர் அல்லது பேரரசனால் உயிர்ப்பிக்கப்படும் என்பது அடையாளத்துவத்தின் கருத்தாக இருந்திருக்கலாம். இவ்விதமாக, இன்னொரு தொடக்காலக் கிறிஸ்தவ எழுத்தாளரான, தெர்த்துல்லியன் என்பவர், "உங்கள் வரலாறுகளைக் கலந்து ஆலோசியுங்கள்; அங்கு நீங்கள் கிறிஸ்தவப்பிரிவில் பேரரசப் பட்டயத்துடன் உலாவந்த முதல் மனிதன் நீரோவே என்று கண்டறிவீர்கள் … டொமீஷியனும்கூட, நீரோவின் வகையான கொடுமைக்குணம் உடையவனாயிருந்து, துன்புறுத்தலில் தனது கைகளை முயற்சி செய்திருந்தான்" (*Apology 5*).

குறிப்புகள்

[1]"மூன்று R" கள் என்பதில், reading, writing and arithmeticஆகியவை உள்ளடங்கும் (இது நகைச்சுவைக்காக, "reading, 'riting, and 'rithmatic" என்று குறிப்பிடப்படுகிறது). [2]ஆதியாகமம் 3ல் இவன் தனது நோக்கத்தை ஒரு சர்ப்பத்தின் மூலம் நிறைவேற்றினான்; வெளிப்படுத்தின விசேஷம் 13ல் இவன் மனிதர்கள் மூலமாக செயல்பட்டான். [3]சில கையெழுத்துப் பிரதிகளில் "நான்" என்றுள்ளது (KJV மற்றும் தமிழ் மொழி வேதாகமத்தில் காணவும்), ஆனுல் கையெழுத்துப் பிரதிகள் "அவர்" என்பதையே ஆதரிக்கின்றன. ஆகையால் சில நவீன மொழிபெயர்ப்புக்கள், இந்த வாக்கியத்தை 12ம் அதிகாரத்தின் முடிவில் வைக்கின்றன. சில மொழிபெயர்ப்புகள் இதை 12ம் அதிகாரத்தின் 18ம் வசனமாகவும் வைக்கின்றன. வலுசர்ப்பமானது

கடற்கரையில் தனது கூட்டாளிகளுக்காகக் காத்திருத்தல் (ஒருவேளை, அவைகள் அழைத்தல் என்பதும் கூட) என்பதைக் காணுதல் சற்றே அதிகமான நாடகத்துவமாயிருக்கலாம், ஆனுல் இது, கொஞ்சம் விளைவுகளே உடையதென்று விவாதிக்கப்படும் விபரங்களில் ஒன்றாக உள்ளது. [4]Myer Pearlman, *Windows Into the Future: Devotional Studies in the Book of Revelation* (Springfield, Mo.: The Gospel Publishing House, 1941), 111. இந்த விவரிப்பை, தானியேல் 7:2ல் உள்ள "பெரிய சமுத்திரம்" என்பதுடன் ஒப்பிட்டுக் காணவும். [5]"வெளிப்படுத்தின விசேஷம், 3" புத்தகத்தில் உள்ள ''பாவத்தின் சுய அழிவுத்தன்மை'' என்ற பாடத்தில் "பாதாளக்குழி" என்பதற்கான விளக்கங்களைக் காணவும். [6]In Mary Shelley's famous science fiction/horror novel *Frankenstein* (1818), Dr. ஃபிராங்கொன்ஸ்டெய்ன் என்பவர், இறந்துபோன உடல்களின் பகுதிகளில் இருந்து தாம் உருவாக்கியிருந்த மனித உருவம் போன்ற ஒன்றை இயங்கும்படி தூண்டியிருந்தார். [7]தானியேல் புத்தகத்தில் உள்ள சிங்கம் போன்ற மிருகம், கரடி போன்ற மிருகம், கெடியும் பயங்கரமுமான மிருகம் ஆகியவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலையைக் கொண்டிருந்தன என்று நாம் பாதுகாப்பாக யூகிக்க முடியும். [8]தானியேல் புத்தகத்தின் நான்கு மிருகங்களும் மொத்தம் ஏழு தலைகளைக் கொண்டிருந்தன. [9]முந்திய புத்தகத்தில் நாம், கடல் மிருகம் என்பது ''அந்திக்கிறிஸ்து'' அல்ல என்று முடிவு செய்திருந்தோம். ("வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் உள்ள, "அந்திக்கிறிஸ்துவும் வெளிப்படுத்தின விசேஷமும்" என்ற பாடத்தில் காணவும்.) இந்தப் பாடத்தில் நாம், அவன் யாராயிருந்தான் மற்றும் இருக்கின்றான் என்பவை பற்றி ஆழ்ந்து சிந்திக்கின்றோம். [10]தானியேல் 7ன் தரிசனம் பற்றிய எனது விவரிப்பை இடமும் காலமும் இவ்விடத்தில் தடைசெய்கின்றன, ஆனால் ஒரு சில குறிப்புகள் இந்தக் கருத்திற்கு உதவிகரமாய் இருக்கக்கூடும்: (1) சிங்கம் போன்ற மிருகத்தின் விபரங்களைப் பற்றி, தானியேல் 4:33-36ஐ ஆய்வு செய்யவும். (2) கரடி போன்ற மிருகம் "ஒரு புறத்தில் மேல் எழும்பிற்று" (தானியேல் 7:5), ஏனென்றால் பேரரசின் ஒரு பகுதி (பெர்சியப்பகுதி) மேலாதிக்கம் பெற்றிருந்தது. (3) சிறுத்தையைப் போன்ற மிருகம் நான்கு தலைகளைக் கொண்டிருந்தது, ஏனென்றால் அலெக்சாண்டர் இறந்தபோது, பேரரசானது நான்கு பகுதிகளாகப் பிரிந்தது.

[11]"R. H. சார்லஸ் என்பவர் ... தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், லூக்கா 21:20ல் இயேசுவின் மொழிநடையையும் பர்னபாவுக்கு எழுதப்பட்ட (ஏவுதல் பெற்றிராத) நிருபம் ஒன்றில் இருந்து ஒரு மேற்கோளையும் குறிப்பிட்டு, ரோமாபுரியே, தானியேல் புத்தகத்தில் கூறப்பட்ட நான்காவது இராஜ்யமாகக் கருதினர் என்பதாக கூறினார்" (Hugo McCord, *The Royal Route of Revelation* [Nashville: 20th Century Christian, 1976], 39). வாய்மொழியிலான ஏவுதலை நம்பாதவர்கள், தொடங்கியிருக்கவே இல்லாத ஒரு இராஜ்யத்தைப் பற்றித் தானியேல் முன்னுரைத்திருக்க முடியும் என்பதை நம்புவதில்லை, எனவே நான்காவது இராஜ்யம் ரோமாபுரியாகும் என்பதை அவர்கள் மறுக்கின்றனர். வேதாகமத்தை எழுதியதற்குத் தேவனே பொறுப்புக்கொண்டுள்ளார் என்பதை விசுவாசிப்பவர்களுக்கு இதை நம்புவதில் பிரச்சினை எதுவும் இருப்பதில்லை. [12]Eddie Cloer, Unpublished lecture notes on Revelation, n.d. [13]James M. Efird, *Revelation for Today* (Nashville: Abingdon Press, 1989), 89. [14]Albert H. Baldinger, *Preaching From Revelation: Timely Messages for Troubled Hearts* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1960), 67. ரோமப் பேரரசின் வரலாறு பற்றிய மறுகண்ணோட்டம் ஒன்றை "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ள "குறிப்பிடத்தக்க குறிகளும் திகைப்பூட்டும் அடையாளங்களும்" என்ற பாடத்தில் காணவும். [15]புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள், ரோமப்பேரரசைப்பற்றி ''இருதயத்தில் மாற்றம் கொண்டிருந்தனர்'' என்று

விளக்கவுரையாளர்கள் சிலர் நினைக்கின்றனர். தொடக்கால எழுத்தாளர்கள் ரோமப் பேரரசிற்கு மரியாதை செலுத்தும்படி போதித்தனர் (ரோமர் 13:1-7; 1 தீமோத்தேயு 2:1, 2; 1 பேதுரு 2:13-17), ஆனால் ரோமர்களால் உபத்திரவம் தொடங்கியபோது, இவர்கள் "தங்கள் சிந்தைகளை மாற்றிகொண்டனர்" என்று அவர்கள் கூறுகின்றனர். கற்பனை செய்யப்பட்டுள்ள இந்த "இருதய மாற்றத்திற்கு" வேதாகமரீதியான ஆதாரம் எதுவும் இல்லை. தொடக்கத்தில் இருந்து முடிவு வரைக்கும், புதிய ஏற்பாடானது அதிகாரத்திற்கு அடிப்படை மரியாதை செலுத்துவதையே போதிக்கிறது (உதாரணத்திற்கு ரோமர் 13ஐக் காணவும்). அதே வேளையில் மோதல்/முரண்பாடு எழுகிறபோது நாம் "மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் தேவனுக்கு கீழ்ப்படிவதே" அவசியம் என்றும் அது போதிக்கிறது (நடபடிகள் 5:29). [16]11:7ஐ நாம் கலந்துரையாடியபோது ("வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் "நீங்கள் மரிக்க விருப்பமாய் இருக்கின்றீர்களா?" என்ற பாடத்தில் காணவும்) "பாதாளக்குழியில் இருந்து ஏறுகிற மிருகம்" என்ற சொற்றொடரில் நிகழ்கால வினைச் சொல் பயன்படுத்தப்பட்டதை நாம் கண்டோம் - இது, அந்த மிருகம் பாதாளக்குழியில் இருந்து தொடர்ந்து வந்து கொண்டுள்ளது என்று சுட்டிக்காண்பித்தது. மிருகமானது நடப்புக்கால வெளிக்காட்சியொன்றை (ரோமப்பேரரசு என்பதை) கொண்டிருந்தாலும், அதைக் காட்டிலும் அதிகமானவற்றை இது உள்ளடக்குகிறது என்று சுட்டிக்காண்பிக்கிறது. மிருகம் ஒன்று "கடலில் இருந்து ஏறிவருவதாக" விவரிக்கப்படும் 13:1லும் நிகழ்கால வினைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பிசாசானவன் சபையைத் தடை செய்ய முயற்சிப்பதற்கு ஏதேனும் அதிகாரத்தை எப்போதுமே நிச்சயமாக்கிக் கொள்கின்றான். [17]வலுசர்ப்பம் தனது ஏழு தலைகளிலும் ஏழு கிரீடங்களைக் கொண்டிருந்தது (12:3); மிருகம் பத்து கொம்புகளின்மீது பத்து கிரீடங்களைக் கொண்டிருந்தது (13:1). கிரீடங்களை வைக்கும் இடம் மாற்றப்பட்ட விஷயத்தில் முக்கியத்துவம் எதுவும் இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம். சாத்தானின் தலையில் உள்ள கிரீடங்கள் உண்மையான அதிகாரத்தைக் குறிக்கின்றன என்றும், மிருகத்தின் கொம்புகளில் உள்ள கிரீடங்கள் பெறப்பட்ட அதிகாரத்தைக் குறிக்கின்றன என்றும் சிலர் விளக்கம் தருகின்றனர். [18]இந்த அம்சங்கள் மீதான குறிப்புகளை, "வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் உள்ள "உங்கள் விரோதியை அறியுங்கள்" என்ற பாடத்தில் காணவும். 17ம் அதிகாரத்தில், தலைகள் மற்றும் கொம்புகள் பற்றிய கூடுதலான அடையாளத்துவ முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது; ஆனுல் 13ம் அதிகாரத்தில் வலுசர்ப்பத்தைப் போன்ற ஒன்று என்பதே வலியுறுத்தமாக உள்ளது. இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் உள்ள "விளக்கம், யூகம் மற்றும் ஒளியூட்டம்" என்ற பாடத்தில், தலைகள் மற்றும் கொம்புகள் பற்றிய கலந்துரையாடலைக் காணவும். [19]KJV வேதாகமத்தில் "seat" என்றுள்ளது, ஆனுல் *thronos* என்பதே இவ்விடத்தில் உள்ள கிரேக்க வார்த்தையாக இருக்கிறது. பெர்கமுவில் அமைந்திருந்த "சாத்தானுடைய சிங்காசனம்" என்பது 2:13ல் குறிப்பிடப்பட்டிருந்தது. இது, அந்த நகரத்தில் சாத்தானுடைய செல்வாக்கு மேற்கொண்டிருந்தது - அது பல வகையில் வெளிப்படுத்தப்பட்டது - என்பதைக் குறிப்பிட்டிருக்கலாம். 13:2ல், "சிங்காசனம்" என்ற சொற்றொடரானது மிகவும் புரிந்துக்கொள்ளப்படும் வகையில் பொதுவாகப் பாவம் நிறைந்த உலகத்தின் மீது சாத்தானுடைய ஆளுகையைக் குறிப்பதாக பயன்படுத்தப்பட்டுள்ளது. [20]"வல்லமை," "சிங்காசனம்" மற்றும் "அதிகாரம்" என்ற சொற்றொடர்கள் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. இந்த இணைவு, "வலுசர்ப்பம் தனது அதிகாரத்தை மிருகத்திற்குக் கொடுத்தது" என்பதை வலிவார்ந்த வகையில் கூறுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த இணைவு, "வலுசர்ப்பம் தனது

*அதிகாரத்தை மிருகத்திற்குக் கொடுத்தது'' என்பதை வலிவார்ந்த வகையில் கூறுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (வசனம் 4).*

*[21]வழக்கம்போல, நான்கு மடங்கு பட்டியலிடுதல் என்பது "ஒவ்வொருவரையும்" என்று அர்த்தப்படுகிறது.* KJV *வேதாகமத்தில் மூன்று மடங்கு பட்டியலிடுதல் மாத்திரமே உள்ளது, ஆனால் கையெழுத்துப் பிரதியின் ஆதாரங்களும், வெளிப்படுத்தின புத்தகத்தின் எஞ்சிய பகுதியின் ஆதாரங்களும், நான்கு மடங்கு பட்டியலிடுதலையே ஆதரிக்கின்றன. [22]சிவிங்கியின் நெருங்கிய உறவின விலங்கான சிறுத்தை, நான்கு கால் விலங்குகளிலேயே மிகவும் வேகமானது என்று பெயர் பெற்றுள்ளது. [23]"மிருகம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "துஷ்ட மிருகம்" என்று அர்த்தப்படுகிறது. [24]3ம் வசனமானது "அதன் தலைகளில் ஒன்று காயப்பட்டிருந்தது" என்று கூறுகிறது, ஆனுல் 12 மற்றும் 14ம் வசனங்கள், அந்த மிருகமே காயப்பட்டிருந்தது என்று கூறுகின்றன. எனவே நாம் இந்தக் காயத்தை முழு மிருகத்திற்கும் நடைமுறைப்படுத்தலாம். [25]இது "தலைகள்" (பன்மை) என்று இருக்கவேண்டுமா அல்லது, ''தலை'' (ஒருமை) என்று இருக்கவேண்டுமா என்பது பற்றி, கையெழுத்துப்பிரதியின் ஆதாரம் பிரிவுப்பட்டுள்ளது.* NIV *வேதாகமம்* "and on each head a blasphemous name" *என்று தரவழைத்ததின்மூலம் இந்த இக்கட்டான நிலையைத் தீர்த்து வைக்க முயற்சி செய்கிறது.* [26]William Barclay, *The Revelation of John,* vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 89. *இந்த மிருகம் "தூஷண பெயர்களால் நிறைந்திருந்தது" என்று பிற்பாடு கூறப்பட்டுள்ளது (17:3), இது ரோமபேரரசில் இருந்தவர்கள் பேரரசர்களினால் பயன்படுத்தப்பட்ட தூஷண பட்டப்பெயர்களை ஏற்றுக்கொண்டனர் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. [27]ஆங்கில வேதாகமத்தில் இவ்விடத்தில்* "that is" *என்பது மொழிபெயர்ப் பாளர்களால் கூட்டப்பட்டுள்ளது. சில மொழிபெயர்ப்புகளில் இதற்கு பதிலாக,* "and" *என்பது கூட்டப்பட்டுள்ளது. [28]6ம் வசனத்தில் "வாசம்பண்ணும்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது,* "tabernacle" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தையாக உள்ளது.* KJV *வேதாகமத்தை காணவும். [29]தேவனுடைய ''கூடாரம்'' என்பது ''பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்கள்" என்பதும், ஏற்கனவே அங்கு சென்றுள்ள கிறிஸ்தவர்களை (ஒருவேளை, வேதசாட்சியாக மரித்திருந்தவர்களை)க் குறிப்பிடுவதற்கான சாத்தியக்கூறு உள்ளது. [30]"பரிசுத்தவான்கள்" என்பது, "பரிசுத்தமானவர்கள்" என்று அர்த்தப்படுகிறது.*

*[31]தொடக்ககாலக் கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட உபத்திரவம் பற்றிய சில உதாரணங்களைத் தருவதற்காக இவ்விடத்தில் சற்றே நிதானிக்க நீங்கள் விரும்பலாம். [32]இங்கு, பிசாசானவன் நம்மை பயமுறுத்த முயற்சி செய்வதற்கு, நிர்பந்தித்தலென்பதை எவ்வாறு பயன்படுத்துகின்றான் என்பதற்கு, உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான கூடுதல் உதாரணங்களைத் தரவும். இந்தப் பாடக்கருத்து ஒரு வகுப்பில் பயன்படுத்தப்பட்டதென்றால், உங்கள் மாணவர்களிடத்தில் நீங்கள் உதாரணங்களைக் கேட்க விரும்பலாம். [33]குறிப்பாக நாம், பேரரச வணக்கத்தைப் பற்றி, அதிலும் விசேஷமாக, டொமீஷியனால் வற்புறுத்தப்பட்ட ஆராதனையைப் பற்றிக் கலந்துரையாடுவோம்.* [34]Barclay, 94. *[35]இந்த அம்சம் இவ்வசனப்பகுதியில் (13:12, 14) பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளது; மிருகத்தைப் பற்றி வியப்படைவதற்கான மிகமுக்கியமான அம்சம் என்று இதை மக்கள் கருதினர் என்பது தெளிவு. [36]இந்தப் புத்தகத்திலேயே வேறொரு பக்கத்தில் உள்ள "நீரோ ரெடிவிவஸ்" புராணம் என்ற துணைப்பாடத்தைக் காணவும். [37]Apology* 5. Quoted by J. W. Roberts in *The Revelation to John (The Apocalypse),* The Living

Word Commentary Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1974), 109. [38]"கொடுக்கப்பட்டது" என்பது, (13:2, 4ல் உள்ளது போல்) வலுசர்ப்பம் தனது அதிகாரத்தை மிருகத்திற்குக் கொடுத்தது என்பதைக் குறிக்கிறது என்று வாதிடப்படலாம், ஆனால் பின்வரும் சிந்தனைகளை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்: (1) வெளிப்படுத்தின புத்தகம் முழுவதிலும். இந்தச் சூத்திரமானது தேவனுடைய கிரியையைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது. (2) வலுசர்ப்பம் செய்த எந்த செயலும் தேவனால் அனுமதிக்கப்பட்டதாகவே இருக்கிறது. "தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை, ..." (ரோமர் 13:1ஆ). [39]பல்வேறு மொழிபெயர்ப்புகளை அனுமதித்துள்ள மூலவசனத்தின் தெளிவற்ற தன்மை என்பது இங்குள்ள ஒரு சிக்கலாகும். இவ்விதமாக, KJV வேதாகமம் 10அ வசனப்பகுதியை, துன்புறுத்துபவர்களுக்கு நடைமுறைப்படுத்தும் வகையில் மொழிபெயர்த்துள்ளது. NIV வேதாகமம் இவ்வசனத்தைத் துன்புறுத்தப்படுபவர்களுக்கு நடைமுறைப்படுத்துகிறது. [40]"... தேவனுடைய கட்டளையிலிருந்து தப்பிக்க வழியில்லை" (Barclay, 97).

[41]"எதிராளியைக் கொலை செய்தல் என்பது பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கடல் மிருகத்தின் வழிமுறையாக உள்ளது. இது நமது வழிமுறையாக இருப்பதில்லை" (Eugene H. Peterson, *Reversed Thunder* [San Francisco: HarperCollins Publishers, 1988], 125). [42]M. Robert Mulholland, Jr., *Revelation: Holy Living in an Unholy World,* Francis Asbury Press Commentary, gen. ed. M, Robert Mulholland, Jr. (Grand Rapids, Mich.: Francis Asbury Press, 1990), 227. [43]"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் "ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கின்றார்" என்ற பாடத்தில் உள்ள 6:4க்கான குறிப்புகளைக் காணவும். நீங்கள் அந்த புத்தகத்தில் தரப்பட்டுள்ள பட்டயத்தைப் பற்றி விவரித்துள்ள குறிப்பு எண்ணை மறுகண்ணோட்டமிடவும் விரும்பலாம். [44]T. F. Glasson, *The Revelation of John*, The Cambridge Bible Commentary on the New English Bible Series (Cambridge, England: Cambridge University Press, 1965), 81. [45]"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும், "கடந்தகாலத்தில் ஜீவித்திருந்த சபை" என்ற பாடத்தில் காணவும். வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் ஜீவ புஸ்தகம் பற்றிய பிற குறிப்புகள் 17:8; 20:12 மற்றும் 21:27 ஆகிய வசனங்களில் காணப்படுகின்றன. [46]மூலவசனத்தில் இந்தச் சொற்றொடர், வாக்கியத்தின் முடிவில், "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்" என்பதற்குப் பின்பு காணப்படுகிறது (KJV மற்றும் NIV வேதாகமங்களில் காணவும்). இதனுடன் தொடர்புடைய இன்னொரு வசனப்பகுதியாகிய 17:8ல் இந்தச் சொற்றொடர், ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்களாய்க் காணப்படாதவர்களைக் குறிப்பதால் NASB வேதாகமத்தின் மொழிபெயர்ப்பாளர்கள் இந்தச் சொற்றொடரை "everyone ... written" என்பதற்குப் பின்பு வைத்திருக்கலாம். இருப்பினும், இவ்விரு வசனப்பகுதிகளையும் இணைப்படுத்துதல் என்பது அவசியமற்றதாக உள்ளது. [47]Owen L. Crouch, *Expository Preaching and Teaching*: *Revelation* (Joplin, Mo.: College Press Publishing Co., 1985), 237. [48]முன்குறித்தல் என்ற கருத்தை (அதாவது, மனிதனைத் தேவன் படைக்கும் முன்பாகவே, அவர் குறிப்பிட்ட சில தனிநபர்களை மீட்கப்படுவதற்கும், குறிப்பிட்ட சில தனிநபர்களை இழந்துபோகப்படுதலுக்கும் முன்நியமித்திருக்கின்றார் என்ற கருத்தை) நிரூபிக்க முயற்சி செய்வதற்கு, 8ம் வசனம் பயன்படுத்தப்பட்டுள்ளது. வேதாகமம் பின்வருமாறு போதிக்கிறது (1) தேவன் தாம் விரும்புகின்றபடி எவரையும் மீட்பதற்கோ அல்லது ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதற்கோ உரிமை கொண்டுள்ளார் மற்றும் (2) தேவன் குறிப்பிட்ட வகையிலான தனிநபர்கள் (விசுவாசித்துக் கீழ்ப்படிபவர்) மீட்கப்படுவார்கள் என்றும் குறிப்பிட்ட வகையிலான தனிநபர்கள் (விசுவாசியாதவர்) இழந்து போகப்படுவார் என்றும் முன்குறித்திருக்கின்றார்.

இதற்கு அப்பால் சென்று, மனிதர்கள் மீட்கப்படுதல் அல்லது இழந்துபோகப்படுதல் என்பதைத் தீர்மானிப்பதில் அவர்களுக்கு எந்தப் பங்கும் இல்லை என்று போதித்தலானது வேதாகமத்தை அதற்கே எதிராக முரண்படச் செய்வதாக உள்ளது. (வெளிப்படுத்தின விசேஷம் உட்பட) வேதாகமம், இயேசுவை பின்பற்றுவதா இல்லையா என்பதை ஒவ்வொரு நபரும் முடிவாக தீர்மானிக்க வேண்டும் என்றே போதிக்கிறது. [49]இவ்விரு வகைகளையும் விளக்கப்படுத்தும் இன்னொரு வழிமுறை 13:6, 8ல் காணப்படுகிறது: பரலோகத்தில் - வாசம் பண்ணுகிறவர்களும் (13:6) பூமியில் - வாசம் பண்ணுகிறவர்களும் (13:8) இருக்கின்றனர். [50]இந்த பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், மக்களுக்கு அவர்களின் பெயர்கள் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வது எவ்வாறு என்று நீங்கள் கூற விரும்புவீர்கள். அவர்கள் ஞானஸ்நானம் பெறாதிருந்தால், விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் கர்த்தரால் அவரது சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் என்று கூறும் நடபடிகள் 2ஐ நினைவுபடுத்துங்கள் (வசனங்கள் 38, 41, 47). சபை என்பது இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்ட சரீரமாக இருப்பதால், அவர்களுடன் சேர்த்துக் கொள்ளப்படுதல் என்பது ஒருவரின் பெயர் இரட்சிக்கப்பட்டவர்களின் பட்டியலில் கூட்டப்படுதல் என்பதாக உள்ளது. உங்கள் உரையைக் கேட்பவர்களில் சிலர், ஒருகாலத்தில் ஞானஸ்நானம் பெற்றிருந்து, இப்போது உண்மையற்றவர்களாய் இருந்தால், ஒருவரின் பெயரானது அந்தப்புத்தகத்தில் இருந்து நீக்கப்படக்கூடும் என்பதை அவர்களுக்கு நினைவூட்டுங்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 3:5; யாத்திராகமம் 32:32), மற்றும் அவர்கள் மீளக்கட்டுவிக்கப்படும்படிக்கு அவர்களை உற்சாகப்படுத்துங்கள் (நடபடிகள் 8:22, 23; யாக்கோபு 5:16).


[51]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 605. [52]Charles Caldwell Ryrie, *Revelation* (Chicago: Moody Press, 1968), 82-84. [53]நீரோ இறந்திருக்கவில்லை என்று சிலர் நம்பினர். மற்றவர்கள் அவன் மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்படுவான் என்று நம்பினர்.

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. 13ம் அதிகாரத்தின் முதன்மை நோக்கம் என்ன?
2. கிறிஸ்தவர்கள் தங்கள் கருத்துநோக்கை காத்துக் கொள்வதற்காகத் தேவன், ஒவ்வொரு மிருகம் பற்றிய முன்னுரைக்குப் பின்பும் ஒரு விசேஷித்த குறிப்பை இடைச்செருகினார் என்று இந்தப் பாடம் கூறுகிறது. அந்த இரண்டு குறிப்புகளும் உள்ளடங்கியிருக்கும் வசனங்களைக் கண்டறிய முயற்சி செய்யவும்.
3. பிசாசானவன் மனித முகவர்களின் மூலம் வேலைசெய்து கொண்டிருக்கின்றான் என்று இந்தப் பாடம் உறுதிப்படுத்துகிறது. இன்றைய நாட்களில் சாத்தான் எந்த மனித முகவர்கள் மூலம் வேலைசெய்து கொண்டிருக்கிறான் என்பதற்கு விவரிப்புக்களைத் தர உங்களால் முடியுமா?
4. தானியேல் 7ன் நான்கு மிருகங்களைப் பற்றியும் அவைகள் வெளிப்படுத்தின விசேஷம் 13ல் விவரிக்கப்பட்டுள்ள கடல் மிருகத்துடன் எப்படி உறவுபடுகின்றன என்பதைப் பற்றியும்

*கலந்துரையாடவும்.*

5. *யோவானின் நாட்களில், கடல் மிருகம் என்பது ரோமப்பேரரசு என்று இந்தப்பாடத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பேரரசு எவ்வகையில் (உதாரணமாக, பலம், செல்வாக்கு, தேவதூஷணம்) கடல் மிருகத்தின் விவரிப்புக்குப் பொருந்துகிறது?*
6. *கடல் மிருகம், பயமுறுத்துதலினால் உண்மைக் கிறிஸ்தவத்தைத் தடைசெய்ய முயற்சிக்கும் எந்த சக்தியையும் குறித்து நிற்க முடியும் என்று இந்தப் பாடத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நாட்களில் பிசாசானவன் இன்னமும் தனது நோக்கத்தை நிறைவேற்றப் பயமுறுத்துதலைப் பயன்படுத்துகின்றானா?*
7. *குணமாக்கப்பட்ட சாவுக்கேதுவான காயத்தைப் பற்றி - மற்றும் அதன் சாத்தியக்கூறுள்ள அர்த்தங்கள் பற்றி - கலந்துரையாடவும்.*
8. *"பூமி முழுவதும்" கடல் மிருகத்தைப் பின்பற்றியதா? கும்பலுக்கு எதிராகச் செல்லுதல் என்பது கடினமானதாக உள்ளதா?*
9. *தேவன் இன்னமும் கட்டுப்பாடு செலுத்துகின்றார் மற்றும் அவர் கடல் மிருகத்தின் நடவடிக்கைகளை மட்டுப்படுத்தினார் என்பதைச் சுட்டிக்காட்ட வசனத்தில் உள்ள குறிப்புகள் யாவை?*
10. *13:10ல் உள்ள முதல் வாக்கியம் (ஆங்கிலத்தில்* "If anyone ... must be killed" *என்பது) குறித்து, இந்த பாடத்தில், சாத்தியக்கூறுள்ள மூன்று அர்த்தங்கள் குறிப்பிடப்பட்டன. நீங்கள் எந்த அர்த்தத்தை விரும்பித் தேர்ந்து கொள்கின்றீர்கள்?*
11. *13:10ன் கடைசிப் பகுதியானது "பொறுமை/சகிப்புத்தன்மை" மற்றும் "விசுவாசம்" என்பவற்றைக் குறிப்பிடுகிறது. பிசாசை எதிர்த்து நிற்பதில் இந்தப் பண்புகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன?*
12. *ஜீவபுஸ்தகம் என்றால் என்ன? ஒருவருடைய பெயர் அந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட வேண்டியது முக்கியமானதாக உள்ளதா?*



கடல் மிருகம் (13:1, 2)